**சீடர்த்துவம்: அழைத்தல், தேர்வு செய்தல், அனுப்புதல்**

**மே 2014 அதிசா சிந்தனை மடல்**

**<u>பலரில் தேர்வு செய்யப்படுதல்</u>**

**நோக்கம்:**

அழைக்கப்பட்டோர் அநேகரானாலும், இயேசு அவருக்காக தேர்ந்தெடுத்தது சிலரையே.

**முன்னுரை:**

இயேசு அவருக்கு சொந்தமாக இருக்கவும், அவருடன் வாழவும், அவரால் கற்பிக்கப்படவும், இறுதியாக அவரைப் போல மாறவும் பன்னிருவரை தேர்ந்தெடுத்தார். இந்த பன்னிருவருடன் இயேசு தன் சொந்த உறவை வலுப்படுத்தி ஒரு சமுதாயத்தை அமைத்தார். நாமும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் முதல் படியை எடுத்து வைக்கவேண்டும். பயமும் கவலையும் இறைவனின் திருமுன் வருவதற்கு ஒரு தடையாக இருக்கக்கூடாது. இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது ஒரு அபூர்வமான கொடையாகும். எனவே இதனை நாம் பொக்கிஷமாக்கிகொள்ளவேண்டும்.

**வருகை பாடல்: <u>இறைக்குலமே திருக்குலமே</u>**

இறைக்குலமே திருக்குலமே தன்மான தமிழ் குலமே
இறைவன் நம்மை அழைக்கிறார் வாருங்கள்.
ஏழையரே எளியவரே சுமை தாங்கி சோர்ந்தவரே
இறைவன் இன்று உரைப்பதை கேளுங்கள்
*Iraikulamae Thirukkulamae Thanmaane Tamil Kulamae*
*Iraivan Nammai Alaikkiraar Vaarunggal.*
*Yelaiyare Eliyavarae Sumai Thaanggi Sornthavarae*
*Iraivan Indru Uraipathai Kelunggal*

புதிய உலகம் படைத்திட புது சமூகமாய் மாறிட
புதிய வாழ்வில் ஒன்று கூடுவோம் -2
*Puthiya Ulagam Padaithidae Puthu Samugamaai Maarida*
*Puthiya Vaalvil Ondru Kooduvoem -2*

அன்பின் பாலமாகவே இறைவன் அழைக்கிறார்
இனிய உறவை வளர்க்கவே இறைவன் அழைக்கிறார் -2
வாருங்கள் வாருங்கள் அன்பின் பாலமாகவே
கூடுங்கள் கூடுங்கள் இனிய உறவை வளர்க்கவே
புதிய விடியில் தேடியே விரைந்து செல்லுவோம்
உறவை பகிர்ந்து வாழவே ஒன்று கூடுவோம் - இறைக்குலமே…
*Anbin Paalamaagave Iraivan Alaikindraar*
*Iniya Uravai Valarkkavae Iraivan Alaikindraar -2*
*Vaarunggal Vaarunggal Anbin Paalamaagavae*
*Koodunggal Koodunggal Iniya Uravai Valarkkavae*
*Puthiya Vidiyal Thediyae Virainthu Selluvoem*
*Uravai Pagirnthu Vaalavae Ondru Kooduvoem - Irakkulamae*

***ஆரம்ப ஜெபம்: (ஒருவர் ஜெபத்தை வழி நடத்தலாம்)***

***வாழ்வை நோக்குதல்:***

*மார்ச் 13, 2013 இந்த முழு உலகத்தின் பார்வையே கத்தோலிக்க திருச்சபையை நோக்கி இருந்தது. கார்டினல் பெர்கோக்லியோ புது திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரான்சிஸ் என்று பெயர்பெற்றார். இப்பெயரை தேர்ந்தெடுத்ததே நம் திருத்தந்தையின் ஆன்மீகத்தையும் அவருடைய பணியையும் முக்கியப்படுத்தி காண்பிக்கின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு புனித பிரான்சிஸ் அசிசியார் அன்றைய காலத்தில் வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட ஆடம்பரம், பெருமை, உள்நாட்டினரிடையே இருந்த கர்வம் போன்றவைகளுக்கு எதிராக இவருடைய எளிமைத்துவம், மனிதபிமானம் மேலும் கிறிஸ்துவத்தின் ஏழ்மையை உயர்த்திக்காட்டிய பண்புகள் அதிகம் கவர்ந்தது. திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரின் வழியாக எளிமையான வாழ்விற்கு இவரை வழிநடத்துகிறது. இவருடைய சிறந்த பணியின் வாயிலாக கத்தோலிக்கர்கள் மட்டுமல்லாமல் மற்ற மதத்தினரும் மற்ற சபையை சார்ந்தவர்களுமான நூறுக்கோடி மக்களின் இதயத்தை தொட்டு விட்டார்.*

***<u>சிந்தனை:</u>***

- *ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருந்தந்தை பிரான்சிஸ் அவர்களை குறித்து நமக்கு எவ்வளவு நன்றாக தெரியும்?*
- *நாமும் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதனை அறிந்திருக்கின்றோமா?*

***இறைவனுக்குச் செவிமடுத்தல்: யோவான் 1: 35-42***

*<u>முதல் சீடர்களை அழைத்தல்</u>*

மறு நாள் யோவான் தம் சீடர் இருவருடன் மீண்டும் அங்கு நின்று கொண்டிருந்தார். இயேசு அப்பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார். யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தனர். இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின் தொடர்வதைக் கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள்;; "என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்த இருவருள் "அந்திரேயா ஒருவர். அவர் சீமோன் பேதுருவின் சகோதரர். அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, "மெசியாவைக் கண்டோம்" என்றார். "மெசியா" என்றால் அருள்பொழிவு பெற்றவர் என்பது பொருள். பின்பு அவர் சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசு அவரைக் கூர்ந்து பார்த்து, "நீ யோவானின் மகன் சீமோன். இனி "கேபா" எனப்படுவாய் என்றார். "கேபா" என்றால் "பாறை" என்பது

***<u>சிந்தனை:</u>***

- *நாம் இரண்டு முறை இவ்வாசகத்தை படிப்போம்*
- *வார்த்தையை அல்லது குறுகிய வசனத்தை தேர்ந்தெடுக்கவும். 3 முறை சத்தமாக ஜெப சிந்தனையுடன் ஒன்று மற்றொன்றுக்கு இடையில் நிறுத்தி வாசிக்கவும்.*
- *நாம் தேர்ந்தெடுத்த வார்த்தையை கேட்பதற்கு 2 நிமிடம் அமைதி காப்போம்.*
- *நமக்கு தொட்ட வார்த்தையை பகிர்வு செய்வோம்.*

***அன்பில் வாழ்வோம்:***

*தனிப்பட்ட முறையிலும் அதிசா உறுப்பினர் என்ற முறையிலும் இறைவன் நம்மை எல்லா இடத்திலும் நீதியுடன் நடந்துக்கொள்ள தேர்ந்தெடுத்திருப்பதை அறிந்திருக்கிறீர்களா?*

- *என் குடும்பத்தில்*
- *என் வேலை இடத்தில்/ பள்ளிக்கூடத்தில்*
- *என் அதிசா-வில்*

*கலந்தாலோசித்து நடைமுறைக்கேற்ற செயல்திட்டத்தை வெளிப்படுத்தவும்.*

***இறுதி ஜெபம்:***

*நாம் தொடர்ந்து அதிசா மற்றும் பங்கின் தேவைகளுக்காக மன்றாடுவோம்.*

***<u>இறுதி பாடல்: சந்தோஷம் பொங்குமே</u>***

சந்தோஷம் பொங்குதே சந்தோஷம் பொங்குதே
சந்தோஷம் என்னில் பொங்குதே
இயேசு என்னை இரட்சித்தார் முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே
*Santhosam Pongguthae Santhosam Pongguthae*
*Santhosam Ennil Pongguthae – Alleluia*
*Yesu Ennai Racthittaar Mutrum Ennai Maatrinaar*
*Santhosam Ennil Pongguthae*

1. வழி தப்பி நான் திரிந்தேன் பாவப் பழியதைச் சுமந்தலைந்தேன்
   அவர் அன்புக் குரலே அழைத்தது என்னையே
   அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே
   *Vali Thappi Naan Thirinthaen Paava Paliyathai Sumanthalainthaen -2*
   *Avar Anbu Kurale Alaithathu Ennaiyae -2*
   *Antha Inba Naalil Enthan Paavam Neengitrae -2*

2. சத்துரு சோதித்திட தேவ உதவியுடன் வருவார்
   ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்
   அந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே
   *Satthuru Sothithida Theva Utharavudan Varuvaar -2*
   *Aanaal Yesu Kaividaar Thaanaai Vanthu Ratchippaar -2*
   *Antha Nalla Yesu Enthan Sonthamaanaarae*

***திருவழிபாடு: நல்லாயன் ஞாயிறு – பாஸ்கா கால 4ம் ஞாயிறு (11 மே 2014)***